**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண். 132/2025 நாள்- 08.06.2026

**வா.சா.1. கருணாகர பிரபு**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

நான் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். ஜமீன் கொல்லங்கொண்டான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தலைமை மருத்துவராக 2008 ம் ஆண்டு 31.05.2024 வரை அரசு மருத்துவராக பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். அப்போது பிரதிவாதி அதே மருத்துவமனையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். என் மனைவியும் இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக இருந்து வந்தார் என்றால் சரிதான். என் மனைவி 2024 ஆண்டு ஜூலை மாதம் பணி ஓய்வு பெற்று விட்டார். நாங்கள் இருவரும் வருமான வரி கணக்கு தாக்கல் செய்து வருகிறோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1. கடனுறுதிசீட்டில் 10.06.2022 அன்று எழுதிக் கொடுக்கப்பட்டது. நாங்கள் கடன் கொடுப்பது சம்பந்தமாக அரசிடம் முறையாக அனுமதி பெற்று கடன் கொடுத்தோமா என்று கேட்டால் அனுமதி பெறவில்லை. அரசு ஊழியராக நான் பணிபுரியும் சமயத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர்களின் நடத்தை விதிகளின் படி அரசிடம் அனுமதி பெறாமல் கடன் கொடுப்பது, வாங்குவது தவறு என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1. கடன் சட்டப்படியான செல்லுப்படியாகக்கூடிய கடன் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நானும், என் மனைவியும் அரசு ஊழியராக பணிபுரிந்த போது பிரதிவாதி மூலம் நிறைய நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் பணிபுரிந்த போது ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரியும் பாபு என்பவருக்கும், இராஜபாளையத்தில் மருத்துவராக பணிபுரியும் மருத்துவர் பாஸ்கர் என்பவருக்கும், சிவகாசி துணை வட்டாட்சியர் கோதண்டராமனுக்கும், ரெட்டியப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வரும் சமுத்திரம் என்பவருக்கும் பிரதிவாதி மூலமாக வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த கடனுக்கு ஆதரவாக மேற்சொன்ன நபர்கள் கொடுத்த ஆவணங்களை பிரதிவாதி வசம் ஒப்படைத்து வைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

முன்பாக பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் எங்கு வைத்து யார் முன்பாக கடன் கொடுத்தேன் என்று விவரங்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2- அறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பை நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அந்த அறிவிப்பில் வா.சா.ஆ.2 அறிவிப்பு ஆங்கிலத்தில் இருப்பதாகவும் தமிழாக்கம் செய்து எனக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும் ஆங்கிலம் தெரியாது என்று குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். பதில் அறிவிப்பின் படி தமிழாக்கம் செய்து பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் முதல் சாட்சி என் மனைவி என்றால் சரிதான். 2 வது சாட்சி என் குடும்ப நண்பர் என்றால் சரிதான். மேற்கண்ட நபர்களை விசாரித்தால் பிரதிவாதிக்கு கடன் கொடுத்த விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டை பிரதிவாதி எழுதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ல் கண்ட கையெழுத்து பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றும் வா.சா.ஆ.1 ஐ பிரதிவாதி பூர்த்தி செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2022 -2023 வருமான வரி கணக்கில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்த விவரம் குறிப்பிட்டுள்ளேனா என்று கேட்டால் குறிப்பிடவில்லை. உண்மையிலேயே நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்திருந்தால் என்னுடைய வருமான வரி கணக்கில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்த விவரத்தை குறிப்பிட்டிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு என் கையிலிருந்த ரொக்க பணத்தை 2 மாதமாக கேட்ட பின்பு கடனாக கொடுத்தேன். இந்த விவரத்தை நான் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். என் மனைவி, பிரதிவாதி மீது 04.01.2025 அன்று இராஜபாளையம் காவல்துணை கண்காணிப்பாளரிடம் கடன் வாங்கியதாகவும் கடனை திருப்பி செலுத்த வேண்டுமென்று புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. அந்த புகாரின் பெயரில் பிரதிவாதிக்கு காவல் நிலையத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது நானும் என் மனைவியும் தான் புகார் கொடுத்தோம் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி நபர்களுக்கு கொடுத்த கடனை வசூல் செய்ய முடியாத காரணத்தினால் வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டை உற்பத்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

சொன்னால் சரியல்ல. நான் பிராதில் குறிப்பிட்டது போன்று பிரதிவாதிக்கு எந்த காலத்திலும் கடன் கொடுத்தது இல்லை என்றும் பிரதிவாதி வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுத்தது இல்லை என்றும் வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றும், எனவே நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.